NEWBEC
NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 7 ஆம் ஞாயிறு | 23 பிப்ரவரி 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

### மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

### சூழலியல் (பணித்துவம்) அன்னை பூமியைக் காப்பாற்றும் துரித தூதுரைப் பணி செய்யும் உரிமையை ஏற்றுக்கொள்ள அழைப்பு

# நான் கைவைக்க மாட்டேன்

லாவ்டாதோ சி என்னும் சுற்றறிக்கையில், யூத-கிறிஸ்தவ மரபில், 'படைப்பு' என்ற வார்த்தைக்கு 'இயற்கை' என்பதைவிட பரந்த அர்த்தம் இருப்பதாக திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார். 'படைப்பு' என்பது கடவுளின் அன்பான திட்டத்தில் அவருடைய ஒவ்வொரு உயிரினமும் அதனதன் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு உயிரினமும், கடவுளின் மென்மைத்தன்மையின் பொருளாகும்.(எண் 76) மனிதர்கள் மட்டுமல்ல; மிகச்சிறிய உயிரினங்களும் கூட அவரால் அன்பு செய்யப்படுகின்றன.(எண்.77) "ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்" என்று திருப்பாடல் ஆசிரியரும் அறிவிக்கிறார். மேலும் அவர் உண்மையிலேயே அப்படிப்பட்டவர் தான்.



யூத-கிறிஸ்துவ மரபில் கடவுளின் படைப்பில் மனிதர்களின் தனித்துவமிக்க இடத்தையும் மற்றும் அவர்களின் பங்கைப் பற்றியும் கூறப்பட்டிருப்பதை திருத்தந்தை சுட்டிக்காட்டுகிறார். மனிதர்கள், கடவுளின் உருவிலும் சாயலாகவும் படைக்கப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், படைப்புகளைப் பாதுகாக்கவும், அதனுடைய திறன்களை வளர்க்கவும் (எண்: 78) மேலும் தங்களுடைய திறன்களை வளர்த்துக்கொள்ளும் பொறுப்புடனும் அவர்கள் படைக்கப்பட்டுள்ளனர்.

உண்மையில் திருத்தந்தையின் கூற்றுப்படி, அனைத்துப் படைப்புகளின் இறுதி இலக்கும் கடவுள் தான். எனவே ஒருவரையொருவர், அழித்துகொள்வதற்கு அல்லது இயற்கையை ஆதிக்கம் செலுத்துவதற்குப் பதிலாக, அறிவாற்றல் மற்றும் அன்பும் கொண்ட மனிதர்கள், ஒருவருக்கொருவரோடும் மற்றும் மற்ற அனைத்து உயிரினங்களையும் தங்களைப் படைத்தவரிடம் அழைத்துச் செல்லும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். எனவே படைப்புகளைப் பராமரிப்பதற்கும், மனிதகுலத்தை சுய அழிவிலிருந்து பாதுகாப்பதற்கும் உள்ள பொறுப்பை அனைவருக்கும் நினைவூட்ட வேண்டிய கடமை திருஅவைக்கு உள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார்.

உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்; உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள். உங்களை சபிப்போருக்கு ஆசி கூறுங்கள். உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.. உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள். கண்டனம் செய்யாதீர்கள்; அப்போதுதான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள்; மன்னிப்புப் பெறுவீர்கள்.."

இன்றைய முதல் வாசகத்தில், "ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவர் மேல் கைவைக்கமாட்டேன் என்று தாவீது கூறி சவுலின் உயிரைக்காப்பாற்றும்போது, அவர் இரக்கமுள்ளவராகக் காட்டப்படுகிறார். இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால், கடவுளின் அனைத்து உயிரினங்களும் படைக்கப்பட்டு அவரால் அன்பு செய்ய்ப்படுவதால், நாமும் மற்றொரு மனிதரையோ அல்லது இயற்கையையோ அழிக்க "நம் கையை உயர்த்தாமல் இருக்கவேண்டாமா? திருத்தந்தை நமக்கு நினைவூட்டுவதுபோல, "அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளது" எனவே சுற்றுச்சூழலுக்கான அக்கறை, நமது சக மனிதர்கள் மீதான உண்மையான அன்பு மற்றும் சமூகத்தின் பிரச்னைகளுக்கு அசைக்கமுடியாத அர்ப்பணிப்பு ஆகிய அனைத்தும் இணைக்கப்படவேண்டும். (எண்;91) ✣

> தனிநபர்கள் அல்லது சமூகங்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான உறவு இறுதியில் கடவுளுடனான அவர்களின் உறவிலிருந்து உருவாகிறது. மனிதன் படைத்தவரின் திட்டத்திற்கு எதிராக தன்னுடைய முதுகைத் திருப்பும்போது, படைக்கப்பட்ட ஒழுங்கின் மீதமுள்ளவற்றில் தவிர்க்க முடியாத விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு சீர்கேட்டை அவன் தூண்டுகிறான்.
>
> திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட்

### இன்றைய இறைவார்த்தை:

1 சாமுவேல் 26: 2, 7-9, 12-13, 22-23

திருப்பாடல்: 103: 1-4, 8,10, 12-13

1 கொரிந்தியர் 15: 45-49

லூக்கா 6: 27-38

INTERNAL CIRCULATION ONLY
BUL 08/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org